4

# பொருளாதார ரீதியாக பிரச்சினையை எதிர்கொள்ளும் சேவைப்பயனாளிக்கான வலுவூட்டல் சமூகப்பணி இடையீட்டு செயன்முறை : வடமாகாண விதவைகள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான தேசிய நிலையத்தை அடிப்படையாககொண்ட சமூகப்பணி பரீட்சயம்.

**திறவு சொற்கள்**

*School of social work ,National Institute of Social Development*
*Liyanagemulla, Seeduwa, Srlanka.*
*Tel :+94112882506/07, Email :Info@nisd.ac.lk*

சேவைப்பயனாளி தன்னுடைய பிரச்சினைகளை தானே அடையாளம் கண்டு கொண்டு அவற்றிலிருந்து வெளிவருவதற்காக வசதிப்படுத்தும் தொழில்வாண்மையான துறையே சமூகப்பணி துறை எனப்படுகிறது. சமூகப்பணி செயன்முறையில் விடயப்பணி என்பது முறைமையாக பயன்படுத்தப்பட்டாலும் சேவைநாடிகளை கையாளும் போதும் சமூக பெறுமானங்கள், நியமங்கள், விழுமியங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக காணப்படுகிறது. ஏனெனில் சேவைநாடிகளின் விருப்பங்களும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்துவதில் பரம்பரை மற்றும் சூழல் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன (ஜெயராசா,2008).

விடயப்பணியின் போது பிரச்சினையின் தோற்றுவாய்கள் மாறுபடுவதனால் ஒவ்வொரு பிரச்சினைகளும் வெவ்வேறு பின்னணிகளை கொண்டுள்ளன. அதற்கு சமூகத்தின் இயங்கியல் தன்மை பங்களிப்பு செய்கிறது. சமூகத்தின் இயங்கியலை தீர்மானிப்பதில் மரபு சார் நம்பிக்கைகள் உந்துசக்தியாக அமைகின்றன. இதன் விளைவாக ஒவ்வொரு மனிதனுடைய பிரச்சினைகளை அணுகுகின்ற பொழுது ஒரேவிதமாக அணுகமுடியாது. விடயபணியானது தொடர்ச்சியானதும் சுழற்சிமுறையான செயன்முறை என்பதை சேவைப்பயனாளியும் வலுவூட்டலில் ஈடுபடுபவர்களும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். ஆகவே சேவைப்பயனாளியின் கௌரவம் பாதிக்கப்படாத வகையிலும் சமூகப்பணி மூலதர்மங்களை கவனத்தில் கொண்டு தொழில்வாண்மை உறவினை கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான இடத்தில் பொருத்தமான சமூகப்பணி திறன்களை கையாள சமூகப்பணியாளர் தொழில்திறன் தேர்ச்சியை கொண்டிருத்தல் அவசியமாகும்.

எனவே சமூகப்பணியாளர் நாட்டின் சட்டமுறைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும். ஏனெனில் தனிநபரை பிரச்சினைக்கு தள்ளும் காரணிகளாக சூழல் அல்லது கொள்கைகள் அமையுமாயின் அவற்றினை மாற்றி அமைப்பதற்கும் நுண்பாக மட்ட சமூகப்பணி இடையீட்டில் இருந்து பெரும்பாக மட்ட சமூகப்பணி இடையீட்டை மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும். ஆகவே பேண் தகு வளர்ச்சி அல்லது விருத்தி தொடர்பாக விடயப்பணி செயன்முறையின் போது கவனம் செலுத்துவது அவசியமாக காணப்படுகிறது.

**விடயப்பணி முகாமைத்துவம்**

**உள்ளேற்பு**

கணவனை இழந்த விதவைகள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான வலுவூட்டல் நிலையத்தின் பரிந்துரைத்தல் மூலம் நோக்க மாதிரி அடிப்படையில் பண்புசார் தரவுதிரட்டல்களை மேற்கொள்ளும் வகையில் சேவைப்பயனாளி உள்ளேற்பு செய்யப்பட்டதுடன் விடயக்கற்கை மூலம் தரவுகளை திரட்டும் நோக்கில் முதலாவது அமர்வில் சமூகப்பணியாளருக்கும் சேவைப்பயனாளிக்குமிடையிலான நல்லுறவையும் நம்பிக்கை தன்மையை கட்டியெழுப்பும் பொருட்டு வரவேற்றல் மற்றும் வெளிப்படைத்தன்மை இரகசியத்தன்மை ஆகிய திறன்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளேற்பு செய்யப்பட்டது.

**கற்கை**

சமூகப்பணி மூலதர்மங்கள் மற்றும் திறன்களை அடிப்படையாக கொண்டு சேவைப்பயனாளியிடமும் பிரதான தகவல் தருநரான பாதுகாவலர், பிள்ளைகள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து விடயக்கற்கை மற்றும் நேர்காணல் ஊடாக தகவல் பெறப்பட்டதுடன் வீட்டு தரிசிப்பின் ஊடாக அவதானம் ஊடாக சேவைப்பயனாளி மற்றும் சூழல் அவதானிக்கப்பட்டு உளவியல் மற்றும் சிந்தனைகள் நடத்தைகளிற்கான விளக்கம் பெறப்பட்டது.

**சம்பவ பின்னணி**

சேவைநாடி வயசு 38 கணவனை பிரிந்து பதின்னான்கு வருடங்களாக வாழ்ந்து வருகிறார். நான்கு பிள்ளைகள் மூத்த மகன் 17 வயது க.பொ.த சாதாரணதரம் படித்து விட்டு வீட்டில் இருக்கிறார். இரண்டாவது மகன் 15 வயது பத்தாம் ஆண்டு படிக்கிறார். மூன்றாவது இரட்டை ஆண் பிள்ளைகள் வயது 14 ஒன்பதாம் ஆண்டு படிக்கிறார்கள். சேவைநாடி மெலிந்த உடல்தோற்றம் உள்ளவராகவும் அடிக்கடி சந்தேகப்படுவராகவும் காணப்பட்டதுடன் துடிப்புடையவராகவும் காணப்பட்டார். சேவைநாடி பத்தாம் ஆண்டுவரை படித்துள்ளதுடன் போராட்ட அமைப்பு ஒன்றிலும் இணைந்துள்ளதுடன் தனது 22 வயதில் பெற்றாரிற்கு விருப்பமின்றி சாதி மாறி திருமணம் செய்துள்ளார். இந்நிலையில் 2006 ம் ஆண்டு கணவனிற்கும் வேறொரு பெண்ணிற்கும் தவறான தொடர்பு ஏற்பட்ட நிலையில் சேவைப்பயனாளி பார்க்கும் விதத்தில் கணவன் குறித்த பெண்ணுடன் பாலியல் ரீதியான தொடர்பை கொண்டிருந்ததுடன் சேவைப்பயனாளிக்கு உணவு வழங்காமல் இரவில் நாய்க்கு வைக்கும் உணவை சேவைபயனாளி நாயை விரட்டி விட்டு சாப்பிட்டதாக தற்போது கவலையடைகிறார். ஐந்து வருடங்களிற்கு முன்னர் தனது தனிப்பட்ட நலன்கருதி நிரந்தர கருத்தடையினை மேற்கொண்டுள்ளதுடன் யுத்தத்தில் சேவைநாடியின் காலிலும் தலையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் சவால்களை முகம் கொடுக்க முடியாமல் உளரீதியாக பாதிக்கப்பட்டு யாரோ செய்வினை மேற்கொண்டதாக தெரிவித்து கோவில்களிற்கு வழிபாடுகளிற்காக வீதி வீதியாக திரிந்து பின்னர் கிறிஸ்த்தவ மதத்திற்கு மாறி மதவழிபாடுகள் ஊடாக ஓரளவு நிலையை எட்டியுள்ளார். மூன்றுவருடம் மிருக வைத்தியதுறையில் தனியார் நிறுவனத்தின் ஊடாக பணியாற்றி வந்ததுடன் அரசாங்கம் தனியார் துறையினர் தகமைகள் இன்றி தொழில் துறையில் ஈடுபடக் கூடாது என தடை விதித்ததை தொடர்ந்து ஆறுவருடங்கள் கொழும்பில் ஆடைத்தொழில் சாலை ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் சேவைநாடியின் நண்பி ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ள நிலையில் அவரும் ஆடை தொழில்சாலையில் பணியாற்ற கொழும்பிற்கு சென்றிருந்த வேளை நண்பியின் கணவரே இரு பிள்ளைகளை பார்க்கும் பொறுப்புடையவராக இருந்ததுடன் ஒரு கண் பார்வையை யுத்தத்தில் இழந்திருந்ததனால் நண்பியின் கணவருக்கும் சேவைநாடிக்கும் பழக்கம் ஏற்பட்டதுடன் நாளடைவில் அந்தரங்க உறவு வரை சென்றிருக்கிறது.

நண்பியின் கணவர் சேவைநாடியை விட ஐந்து வயது குறைந்தவர். இச்சூழலில் சேவைநாடியினுடைய பிள்ளைகளை கணவரின் தாயாரும் தம்பியாரும் கவனித்து வந்துள்ளார்கள்.

பின்னர் பிள்ளைகளை பராமரிப்பதற்கும் நண்பியின் கணவருடன் தொடர்பினை பேணிகொள்வதற்கும் கிளிநொச்சியில் உள்ள தனது வீட்டுக்கு வந்த சேவைநாடி கண்ணிவெடி அகற்றும் பிரிவில் நான்கு வருடங்கள் பணியாற்றி இருக்கிறார். எனினும் காய்சல் காரணமாக ஒருமாதம் எவ்வித முன்னறிவித்தலும் வழங்காமல் வீட்டில் நின்ற காரணத்தினால் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் இருந்து பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இக்காலப்பகுதியிலே உறவு நிலையில் இருந்த கணவர் விபத்து ஒன்றில் சிக்கி தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் பாரிய வேலைகளை செய்ய முடியாத நிலை காணப்பட்டதனால் போதை மற்றும் கசிப்பு பழக்கத்திற்குள்ளாகியுள்ளார். ஆதலினால் சேவைநாடி உறவுநிலை கணவரை வீட்டை விட்டு வெளியேற்றியுள்ளதுடன் தற்போதும் உறவுநிலையில் உள்ளார். இச்சந்தர்ப்பத்தில் உறவு நிலை கணவரின் மனைவி தன்னுடைய பிள்ளைகள் இருவரையும் தன்னிடம் தருமாறு சண்டையிட்டு வருவதுடன் அப்பிள்ளைகள் தற்போது உறவுநிலை கணவரின் தம்பியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

சேவைநாடி தற்போது இரணைமடு நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு றோல்ஸ் விற்பனை செய்யும் பெட்டிக்கடை வியாபாரி ஒருவரின் கீழ் உணவு பண்டங்கள் தயாரிப்பதற்காக கூலியாளாக பணியாற்றி வருகிறார். சேவைநாடி பெண்தலைமைத்துவமாக கொண்ட குடும்பமாக இருப்பதனால் கணவனை இழந்த விதவைகள் மற்றும் பெண்தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கான வலுவூட்டும் தேசிய செயலகம் ஊடாக கோழி வளர்ப்பிற்கு 100000.00 ருபாவினை வழங்கியிருந்தது. சேவைநாடி கோழிக்கூட்டை 90000.00 ருபாவிற்கு அமைத்திருந்ததுடன் கோழி வளர்ப்பினை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் கோழி கூடு தயார் நிலையில் காணப்படாததுடன் மிகுதி 10000.00 ருபா மாத்திரம் உள்ளதாக தெரிவித்திருந்ததுடன் கோழி வளர்க்க தன்னிடம் பொருளாதார நிலை இல்லை எனவும் தெரிவித்திருந்தார். சேவைநாடியின் வீடு வேலிகளற்ற நிலையில் காணப்படுவதுடன் அருகில் பற்றைகளும் குளமும் காணப்படுவதுடன் கசிப்பு விற்பனை மற்றும் நுகர்வோரின் அச்சுறுத்தல் அதிகம் காணப்பட்டதுடன் மலசலகூட கதவினையே கழற்றி சென்றுள்ள நிலையை காணக்கூடியதாக உள்ளது எனினும் சேவைநாடிக்குள்ள சட்டரீதியற்ற குடும்ப உறவு தொடர்பாக குறித்த நிறுவனம் அறிந்திருக்க வில்லை என்பதை அழுத்தமாகவும் தெரிவித்தார்.

குடும்பத்திற்குள் பிள்ளைகளுக்கான பராமரிப்பு ஆரோக்கியமானதாக காணப்படவில்லை என்பதுடன் குடும்ப தீர்மானமெடுத்தல் கூட்டாகவும் காணப்படவில்லை. இந்நிலையில் ஒருவாரத்திற்கு முன்னர் சேவைநாடியின் ஒன்பதாம் ஆண்டு பிள்ளைகளுக்கும் அயல் வீட்டுகாரருக்கும் ஏற்பட்ட தகராறில் சகோதரருக்காக நீதி கேட்க சென்ற பதினேழு வயது மகன் தலையில் அலவாங்கால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகிறார். இந்நிலையில் சாப்பிடுவதற்கே முடியாதநிலையில் உள்ளபோது உறவுநிலையில் உள்ள கணவர் வீட்டுக்குரிய பொருட்கள் மற்றும் காசு ஆகியவற்றை கொடுத்து உதவியுள்ளார்கள்.

**சமூகப்பணி தேவையும் வகிபங்கும்**

சேவைப்பயனாளி தற்போது 42 வயதினை எட்டியுள்ள நிலையில் சிறுவயது பருவம் முதல் தற்போது வரைக்கும் பிரச்சினைகளை சுமப்பதாக எண்ணுவதுடன் தவறான பாலியல் தொடர்பூடாக மகிழ்ச்சியாக வாழ்வதாகவும் கருதுகிறார். குடும்ப ரீதியான அபிவிருத்தி திட்டமிடல் எதுவும் அற்றவராகவும் பிள்ளைகளைவிட பாலியல் தொடர்பிற்கு முக்கியதத்துவம் கொடுப்பதனால் வாழ்வாதார முயற்சிகள் உட்பட பிள்ளைபராமரிப்பு என்பன பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சேவைப்பயனாளிக்கு ஆறு வருடத்திற்கு

முன்னர் கோழிவளர்ப்பு வசதிகள் செய்யப்பட்ட போதும் சில மாதங்களில் குறித்த கோழிக்கூட்டை தன்னுடன் பணியாற்றும் நண்பர்களின் உதவியுடன் விற்பனை செய்துள்ளார். மூன்றுவருடத்திற்கு முன்னர் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள்ள நிலையில் குறித்த சைக்கிளை சேவைப்பயனாளி பழுதடைந்துவிட்டதாக விற்பனை செய்துள்ளார். அது மாத்திரமன்றி வேலைகளுக்கு செல்வதும் திடீரென முன் அறிவித்தல் இன்றி வேலைக்கு செல்லாமல் விடுவதுமாக காணப்பட்டதனால் குறித்த நிறுவனங்கள் மற்றும் கடைகள் குறித்த சேவைப்பயனாளியை வேலையை விட்டு நீக்குவதில் அக்கறை காட்டியுள்ளன. எனினும் சேவைப்பயனாளி இதனை வாடிக்கையாக கொண்டுள்ளார்.

இதன் விளைவாக குறித்த சேவைப்பயனாளிக்கான நலன்புரி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசும் அரசசாரா நிறுவனங்களும் சவால்களை சந்தித்து வந்திருக்கின்றன. சேவைப்பயனாளியை பொறுத்தவரையும் அரசும் அரசசாரா நிறுவனங்களும் தங்களை வைத்து பிழைப்பு நடத்துவதான மனப்பாங்கை கொண்டிருப்பதுடன் மீண்டும் மீண்டும் வாழ்வாதாரம் வழங்குவார்கள் என்ற அசமந்த போக்கையும் உடையவராக காணப்படுகிறார்.

இந்நிலையில் அவருடைய வீட்டு சூழல் மற்றும் வளமதிப்பீடுகளை கணிப்பிடாமல் கோழிவளர்ப்பிற்கு உதவியை தனியார் உதவியுடன் கணவனை இழந்த விதவைகள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்களிற்கான தேசிய நிலையம் வழங்கியுள்ளது. சேவைநாடியும் குறித்த திட்டத்தை உள்வாங்கியுள்ளதுடன் வழங்கப்பட்ட நிதி 100000.00 ருபாவினையும் கோழிக்கூடு அமைப்பதில் கவனம் செலுத்தியுள்ளதுடன் உள்ளூர் வளங்களை பயன்படுத்தி கோழிக்கூட்டினை அமைத்துள்ள நிலையில் செலவான நிதியை விடவும் அதிகமாக கணக்கு காட்டி கோழிக்கூட்டினை பூர்த்தி செய்யாத நிலையில் காணப்படுகிறார். குறித்த வாழ்வாதாரத்தை வழங்கியவர்கள் செய்வினை ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதனால் குறித்த பாவத்தை போக்கவே தனக்கு வாழ்வாதாரம் வழங்கியுள்ளதாகவும் அதன் விளைவாக வழங்கப்பட்ட வாழ்வாதாரத்தை பிரயோசனப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் கிறிஸ்த்தவ மதம் என்பதனால் தனது குடும்பத்தை பாதிக்கவில்லை என்ற கருத்தை முன்வைக்கும் சேவைப்பயனாளி கிராமிய வழிபாட்டு நம்பிக்கைகளில் நம்பிக்கை உடையவராகவும் காணப்படுகிறார்.

சேவைப்பயனாளி வாழும் சூழல் யுத்த பாதிப்பிற்குட்பட்ட பிரதேசம் என்பதனாலும் கசிப்பு விற்பனை உயரளவில் காணப்படுவதாலும் சேவைப்பயனாளியின் பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. சேவைப்பயனாளியின் மூத்த மகன் 17 வயதினை பூர்த்தி செய்யாத நிலையில் சீர்திருத்த பள்ளியில் ஆறுமாத கால தண்டனையை அனுபவித்து வந்துள்ளதுடன் அயலவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து தலையில் தாக்கப்பட்டு காதறுந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்நிலையில் சமூகப்பணி இடையீடு அவசியமானதுடன் குறித்த சேவைநாடியின் பிரச்சினையை அவராகவே தீர்ப்பதற்கும் குறித்த பிரச்சினையில் இருந்து தானாகவே வெளிவருவதற்கும் சமூகப்பணி திறன்கள் மற்றும் சமூகப்பணி முறைமை மூலதர்மங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டு தொழில்வாண்மை உறவுநிலை கட்டியெழுப்பட்டு ஊக்கப்படுத்தல் வழங்கப்படவேண்டும்.

**பிரச்சினைக்கான கணிப்பீடு**

சேவைநாடியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைதரவுகள் கோட்பாடு மற்றும் தரவு திரட்டல் கருவிகள் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டு பிரச்சினையை சேவைநாடி விளங்கிக்கொள்ள வசதிப்படுத்தப்பட்டது.

**Dynamic Diagnosis**

சேவைப்பயனாளியின் நடத்தைகள் மற்றும் ஆளுமைகள் புறத்தோற்றம் விசேட பண்புகள் பிரச்சினையை கையாளும் விதம் முடிவெடுக்கும் ஆற்றல் எதிர்நோக்கும் சக்தி போன்றவற்றை அடையாளப்படுத்துவதற்காக பின்வருமாறு கணிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

| **இல** | **கணிப்பீட்டு காரணிகள்** | **மறையானவிடயங்கள்** | **நேரான விடயங்கள்** |
|---|---|---|---|
| 01 | உடலியல் காரணிகள் | கால் மற்றும் தலை ஆகியவற்றில் காயமடைந்து இருத்தல்.<br>முள்ளந்தண்டில் காயமடைந்து இருத்தல். | கருத்தடை மேற்கொண்டிருத்தல். |
| 02 | உளவியல் காரணிகள் | சிறுவயதில் சகோதரர்களை இழந்திருத்தல்.<br><br>திருமண வாழ்க்கையில் பிரிந்து இருத்தல்.<br><br>தவறான பாலியல் தொடர்புகளை கொண்டிருந்ததனால் கடவுள் என்னை தண்டிப்பார் என்கின்ற மனோநிலை. | தன்னம்பிக்கையை கொண்டிருத்தல்.<br>கடின உழைப்பிற்கான மனோநிலை. |
| 03 | ஆன்மீக காரணிகள் | கடவுள் தொடர்ச்சியாக என்னையே சோதிக்கின்றான் என்கின்ற மனோநிலை. | கடவுளிற்கு விசுவாசமாக இருத்தல்.<br>பிரார்த்தனை செய்தல் |
| 04 | ஆறிகைகாரணிகள் | சிறுவயதில் இருந்து வாழ்க்கையை அனுபவிக்கவில்லை என்கின்ற மனநிலை | சமூகத்திற்கு முன்னால் மற்றவர் பாராட்டும் வகையில் வாழ வேண்டும் என்கின்ற சிந்தனை. |
| 05 | நடத்தைரீதியான காரணிகள் | கவனக்குறைவு பிள்ளைகளில் பொருத்தமான பராமரிப்பை மேற்கொள்ளாது இருத்தல்.<br>அயலவர்களுடன் முரண்பாட்டை உறவை கொண்டிருத்தல். | வேலைத்தளத்தில் அக்கறையுடன் பணியாற்றுதல். |
| 06 | பொருளாதார காரணிகள் | வேலை இடைநிறுத்தம்.<br>தோழில் பாதுகாப்பின்மை | தையல்பயிற்சி பெற்றிருத்தல் கோழிவளர்ப்பினை மேற்கொள்வதற்கான அறிவினை கொண்டிருத்தல் |
| 07 | குடும்பரீதியான காரணிகள் | பிள்ளைகளின் வெறுப்பிற்குள்ளாகியிருத்தல். | சித்தப்பாவின் உதவி காணப்படல். |

| | | | |
|---|---|---|---|
| | | முறையற்ற பாலியல் தொடர்பு | மூத்த மகனின் ஆதரவு இருத்தல் மூத்த கணவரின் தாயாரினால் பிள்ளைகளை பராமரிப்பதற்கான உதவியிருத்தல். |
| 08 | மனவெழுச்சி ரீதியான காரணிகள் | அடிக்கடி கவலைப்படுதல். எளிதில் கோபம் அடைவராக காணப்படல். ஆக்கோற்சமான வார்த்தைகளை பிரயோகித்தல் | மற்றவர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளும் போது அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தல். |

## Clinical Diagnosis.

உடல்ரீதியானது சிந்தனை அறிகை நடத்தை மனவெழுச்சி ரீதியானவற்றில் மருத்துவம் சார் குணம் குறிகளை அடையாளப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிறது. கால் மற்றும் தலையில் காயங்கள் காணப்படுவதனாலும் சிறுவயதில் சகோதரர்களின் இழப்பு கணவனின் பிரிவு யுத்தத்தில் கால் மற்றும் தலைப்பகுதியில் காயம் காரணமாகவும் உடலின் ஆரோக்கியமற்ற தன்மையை அனுபவிப்பதுடன் உளவியல் ரீதியாக ஆரோக்கியமற்ற நிலையில் உள மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்திருந்த போதும் தற்போது சிகிச்சையை இடை நிறுத்தியுள்ளதால் நெருக்கீட்டினை சந்தித்து வருகிறார்.

**பிரச்சினை பகுப்பாய்வு**

சேவைப்பயனாளி கிறிஸ்த்தவ பெந்திக்கோஸ் மதத்தை சேர்ந்திருப்பதனால் கடவுள்மீதான நம்பிக்கையையும் கொண்டுள்ளார். துன்பங்கள் வரும் போது யேசுவை நினைத்து பிரார்த்தனை செய்வதனால் துன்பங்களில் இருந்து வெளிவரமுடியும் என்பது அசையாத நம்பிக்கையாகவுள்ளது. அமர்வினை முன்கொண்டு செல்வதிலும் பிரச்சினைகள் காணப்படவில்லை. பொதுவாக கிறிஸ்த்தவ மத கூட்டங்களில் விழிப்புணர்வு விடயங்கள் பேசப்படுவதால் அதிகமான விடயங்களை அறிந்தவராக உள்ளார். கணிப்பீடு செய்யும் போதும் சூழலியல் கோட்பாட்டின் பிரகாரம் அவருடைய பிரச்சினை எந்த எந்த மட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைக்குள் தள்ளும் சூழலியல் காரணிகள் எவை போன்றவற்றை கணிப்பிடவும். குறித்த சேவைநாடியின் விருத்தி உளவியல் பருவங்களை மதிப்பீடு செய்வதற்கு அவசியமாகிறது. குறித்த சேவைப்பயனாளியின் குடும்ப கட்டமைப்பு சீர் குலைந்த நிலையில் காணப்படுவதுடன் வேலைக்காக சேவைநாடி பிள்ளைகளை விட்டு விட்டு தூர இடங்களில் பணியாற்றுவதனால் பிள்ளைகள் அடைய வேண்டிய விருத்தி உளவியல் பருவங்களை அடையாததனால் ஆகோற்ச நடத்தை உடையவர்களாகவும் மனவெழுச்சிக்கு அடிக்கடி உட்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மூத்த மகன் சட்டவிரோத மண் கடத்தல் மற்றும் மரம் கடத்தலில் ஈடுபடுவதனால் சட்டரீதியான அறிவு அல்லது சட்டம் தொடர்பான விழிப்புணர்வு அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். அது மட்டுமன்றி சுற்றுப்புறத்தில் கசிப்பு பாவனை மற்றும் கஞ்சாவிற்பனை அதிகரித்து இருப்பதனால் வயதுவேறுபாடின்றி அதற்கு அடிமையாகி உடல் மற்றும் உளநலக்குறைவு உடையவர்கள் காணப்படுவதுடன் சமூக நியமங்கள் குழப்பநிலைக்குள்ளாகிய நிலையில் காணப்படுகின்றன.

முரண்பாட்டு கோட்பாட்டின் பிரகாரம் விழுமியங்கள் சீர் குலைந்துள்ள நிலையில் பாவம், புண்ணியம் என்ற வேறுபாடற்ற வருமானம் ஈட்டலையே அப்பிரதேசத்தில் இருக்கிறவர்கள்

மேற்கொள்கின்றனர். ஆள் உள்ளுணர்வு குழப்பங்கள் காணப்படுவதனால் ஆளிடை தொடர்பை கட்டியெழுப்புவதில் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட கிராமமாக காணப்படுவதனால் சேவை வழங்கல் என்பது குறைவாக காணப்படுகிறது. முறைமை கோட்பாட்டின் பிரகாரம் பிள்ளைகளின் நடத்தையானது மாறுபாடுடையதாக இருப்பதனால் பாடசாலையில் ஆசிரியர்களின் அணுகுமுறையும் மாறுபாடுடையதாகவே காணப்படுகிறது. இவ்வாறு சேவைநாடியின் இலக்குகளை திட்டமிடும் போதும் வாழும் சூழல் மற்றும் சமூகத்தின் இயற்கை தன்மையை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளதால் சமூக விஞ்ஞான மற்றும் கோட்பாட்டு நியமங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

**சேவைப்பயனாளியிடம் காணப்பட்ட பிரச்சினைகள்**

- உளவியல் ரீதியான நெருக்கடி
- வாழ்வாதார பிரச்சினை
- சேவைநாடியின் பிள்ளைகளின் பாடசாலை ஒழுங்கீனமின்மையும் பிறள்வு நடத்தையும்
- குடும்ப ஆதரவின்மை

**விடய அணுகுமுறையியல்.**

விடய அணுகுமுறையியல் சேவைப்பயனாளிக்கான சமூகப்பணி இடையீட்டின் உறுதி தன்மையை விளக்குவதுடன் அவற்றின் விளைவுகளை விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு செய்யவும் பயன்படுகிறது. சேவைநாடியின் ஆரம்ப கட்ட தகவலானது களதரிசிப்பு மற்றும் அவதானம் ஊடாக ஆரம்பகட்ட தகவலானது சேவைப்பயனாளியினுடைய வீட்டுத்தரிசிப்பினை மேற்கொண்டு குடும்ப வாழ்வாதார முறைமை, பிள்ளை பராமரிப்பு மற்றும் சுற்றுப்புற சூழல், கிராமிய பின்னணி, குடும்ப மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பு என்பன அவதானித்து குறிப்பிடப்பட்டதுடன் விடயக்கற்கை மூலமும் தரவுகள் பெறப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் கணவனை இழந்த மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வலுவூட்டல் நிலையத்தின் பதிவேடுகள், பிரதேச செயலகத்தின் பதிவேடுகள் போன்றவற்றின் மூலம் தரவுகள் திரட்டப்பட்டது.

சேவைநாடியிடம் காணப்பட்ட பிரச்சினைகள், சமூகப்பணி கோட்பாடுகளான உளப்பகுப்பாய்வு மற்றும் சூழலியல் கோட்பாடு மூலமும், இடைவெளிகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன் சமூகப்பணி திறன்கள், சமூகப்பணி மூலதர்மங்களின் அடிப்படையில் பிரச்சினைகளை இனங்கண்டு பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை அவராகவே தீர்ப்பதற்கு வசதிப்படுத்தப்பட்டது. சேவைநாடியின் பிரச்சினைகளை கணிப்பீடு செய்வதற்கு Life line, Life Chart, Eco Map, Problem Tree, Fish Born, Spidergram போன்றவற்றின் ஊடாக தகவல் திரட்டப்பட்டு கணிப்பிடப்பட்டது. திரட்டப்பட்ட தகவலை அடிப்படையாக கொண்டு பண்புசார் மற்றும் அளவு சார் தகவல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சமூகப்பணி தலையீடு**

சேவைப்பயனாளிக்கான இடையீட்டு செயன்முறை என்பது பிரச்சினைகளை தொழில்வாண்மை ரீதியாக கணிப்பீடு செய்த பின்னர் சேவைப்பயனாளி எதிர்பார்க்கும் ஆரோக்கியமான இலக்கினை அவராகவே அடைவதற்கு வசதிப்படுத்தலை குறிக்கும். ஆகவே இடையீட்டு செயன்முறையின் போது இலக்குகளினை மதிப்பீடு செய்வதுடன் அவ் இலக்குகளை அடைவதற்கான வளங்கள் மற்றும் மாற்று வழிகள் தொடர்பான கணிப்பீட்டை மேற்கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

**பிரதான இலக்கு**

பொருளாதார ரீதியாக பிரச்சினையை எதிர்கொள்ளும் சேவைப்பயனாளிக்கான வலுவூட்டலுக்கான சமூகப்பணி இடையீட்டை மேற்கொள்ளுதல்.

**உப இலக்கு**

- பிள்ளைகளின் ஆதரவை பெற்றுக்கொடுத்தல்.
- சேவைப்பயனாளியின் சுயத்தை உணர செய்தல்.
- சேவைப்பயனாளியின் உளநல மேம்பாட்டை உறுதி செய்தல்.
- சேவைப்பயனாளியின் பொருளாதார செயற்பாட்டிற்கு ஆளணி உதவியை வசதிப்படுத்தல்.
- வாழ்வாதாரச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தல்.

மேற்குறித்த இலக்குகளை அடையும் பொருட்டு சமூகப்பணியாளரினால் சேவைநாடியுடன் கலந்துரையாடப்பட்டு திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டது.

**சமூகப்பணி செயற்படுத்தல்.**

சமூகப்பணி தலையீட்டில் அடையாளப்படுத்தப்பட்ட இலக்குகளை அடையும் பொருட்டு சேவைநாடியின் ஒப்புதலுடன் தயாரிக்கப்பட்ட திட்டத்தை செயற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது.

**பிள்ளைகளின் ஆதரவை பெற்றுக்கொடுத்தல்**

பாடசாலை பிள்ளைகளின் உசாந்தன் (பெயர்மாற்றப்பட்டுள்ளது) மற்றும் உசாகரனின் (பெயர்மாற்றப்பட்டுள்ளது) நடத்தை திருத்தங்களிற்கான உளவளத்துணை செயற்பாட்டை முன்னெடுக்க பாடசாலை அதிபர் மற்றும் உளவளத்துணை ஆசிரியரிடம் கலந்துரையாடி வசதிப்படுத்தப்பட்டதுடன் பாடசாலை உளவளத்துணை ஆசிரியரால் உளவளத்துணை செயற்பாட்டை முன்னெடுக்க வசதிப்படுத்தப்பட்டதுடன் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரினால் குறித்த பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டு மாணவர்களின் கல்வி செயற்பாட்டை கண்காணிப்பது என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லவும் மேலதிகவகுப்புக்களுக்கு செல்லவும் நீண்ட நேரம் செலவாவதனால் அவற்றினை சரி செய்வதற்கு துவிச்சக்கர வண்டி ஒன்றினை வசதிப்படுத்திக் கொடுக்கும் நோக்கில் சிறுவர் நன்னடத்தைப்பிரிவு உத்தியோகத்தரினால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சேவைப்பயனாளி தங்குவேலை மற்றும் வெளியில் வேலைக்கு செல்வதால் பிள்ளைகளின் பராமரிப்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பொருட்டு சமூகப்பணியாளரினால் சேவைப்பயனாளியின் முதல் கணவரின் தம்பியுடன் கதைத்து வசதிப்படுத்திக்கொடுக்கப்பட்டது.

**சேவைப்பயனாளியின் சுயத்தை உணர செய்தல்**

சேவைப்பயனாளி குடும்ப கட்டமைப்பு சீர் குலைந்து இருத்தல் மற்றும் பொருளாதார நிலை மந்தமாக காணப்படுவதை அடுத்து சேவைப்பயனாளியிடம் காணப்பட்ட பலங்களை அடையாளப்படுத்தி ஊக்கப்படுத்தல் சமூகப்பணியாளரினால் மேற்கொள்ளப்பட்டது. சேவைப்பயனாளி அரசில் தங்கி வாழுபவராகவும் எல்லாவற்றையும் அரசாங்கம் அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற மனநிலையில் காணப்பட்டதுடன் பிள்ளைகளின் பராமரிப்பைவிட தனது சுகத்திற்கும் சுதந்திரத்திற்கும் முக்கியதத்துவம் உடையவராக காணப்பட்டுள்ளதால் சமூகப்பணியாளரால் அவருடைய அறிகையில் மாற்றத்தை ஏற்படுத்தி நடத்தையை மாற்றுவதற்கு உளக்கல்வி வழங்கப்பட்டது.

**சேவைப்பயனாளியின் உளநல மேம்பாட்டை உறுதி செய்தல்**

பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தரினால் சேவைப்பயனாளியின் உளநலத்தை மேம்படுத்தும் பொருட்டு தனிநபர் உளவளத்துணை மேற்கொள்ளப்பட்டதுடன் தேவைப்படும் பட்சத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை உளநலபிரிவை நாடவும் வசதிப்படுத்தப்பட்டது. சேவைப்பயனாளி மற்றும் குடும்பத்திற்கு இடையே நெருக்கம் காணப்படாததனாலும் பிள்ளைகளின் ஆதரவை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் குடும்ப உளவளத்துணை செயற்பாட்டினை பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டது.

**சேவைப்பயனாளியின் பொருளாதார செயற்பாட்டிற்கு ஆளணி உதவியை வசதிப்படுத்தல்**

**குடும்பகுழுகலந்துரையாடல்**

இரு குடும்ப குழு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒன்று அம்மம்மா, தாய் மற்றும் பிள்ளைகளுடனும் மற்றயது சித்தப்பா மற்றும் பிள்ளைகளுடனும் நடாத்தப்பட்டது ஆகும். குறித்த கலந்துரையாடலில் அம்மம்மா வீட்டு வேலைகளை பொறுப்பெடுத்து மேற்கொள்வதும் பிள்ளைகள் அம்மா வேலைக்கு சென்று வந்தவுடன் சிறு உதவி செய்வதும் அம்மா இரவு தங்கு வேலையில் இருந்து பகல் நேர வேலையில் ஈடுபடுவது தொடர்பாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றய கலந்துரையாடலில் சித்தப்பாவும் மூத்த மகனும் வீட்டு வேலியை அடைத்துக்கொள்வது தொடர்பாக பேசப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் போது சமூகப்பணியாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் பங்குபற்றியிருந்தனர்.

**விடயமாநாடு**

சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தரினால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தலிற்கு அமைய சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் தலைமையில் விடயமுகாமையாளரான பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வலுவூட்டல் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வசதிப்படுத்தலுடனும் கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உதவியாளர், பெண்தலைமைத்துவ வலுவூட்டல் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், சமூகப்பணியாளர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் போன்றோர் கலந்து கொண்டிருந்ததுடன் சேவைநாடிக்கு அறிவுறுத்தப்பட்ட போதும் சேவைநாடி தொலைபேசி ஊடாக வரமுடியாத காரணத்தை தெரிவித்திருந்தார். அதற்கமைய விடயமாநாட்டில் குறித்த சேவைநாடியின் பிரச்சினை விரிவாக கலந்துரையாடப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

உளரீதியாக குறித்த சேவைப்பயனாளி நிலையான தீர்மானங்களை கொண்டிராததனால் சேவைப்பயனாளியை சுயமாக இயங்குவதற்கான ஊக்கப்படுத்தலை மேற்கொள்வதற்கு சமூகப்பணியாளர் வசதிப்படுத்துவதற்கான பொறுப்பை பாரம் எடுத்துக்கொண்டார்.

உளவளத்துணை செயற்பாட்டை மேற்கொள்ள பெண்கள் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி சமூக பாதுகாப்பு அமைச்சின் உளவளத்துணையாளர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதுடன் இடமாற்றத்திற்குள்ளாக நேரிடின் சமூகபாதுகாப்பு அமைச்சின் உளவளத்துணையாளரின் உதவியுடன் குறித்த உளவளத்துணை செயற்பாட்டை முன் எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

குறித்த சேவைநாடி ஒன்றுக்கு பின் முரனான தீர்மானங்களை மேற்கொள்வதனாலும் பாலியல் ரீதியான தொடர்பை பேண விரும்புவதனாலும் சேவைநாடி மற்றும் அவரது பிள்ளைகள் பாதிப்படைய கூடிய வாய்ப்பு காணப்படுவதனால் அவ்வாறான நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு குடும்ப ஆதரவு பொறிமுறையை ஏற்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கான பொறுப்பினை சமுர்த்தி உத்தியோகத்தர்

பொறுப்பேற்றுக்கொண்டதுடன் கிராமசேவகர் மற்றும் மத தலைவரின் உதவியை பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலகத்தில் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்ட வாழ்வாதாரம் இல்லாததனால் ஏற்கனவே பெண்தலைமைத்துவ வலுவூட்டல் நிலையத்தினால் வழங்கப்பட்ட வாழ்வாதாரமான கோழி வளர்ப்பை முன்னெடுப்பதற்கான பணிகளையும் தேவைப்படும் பட்சத்தில் கோழிக்கூட்டில் குறைந்த எண்ணிக்கையான கோழிவளர்ப்பினை மேற்கொள்ள உதவுவதாகவும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

சமூக நலன் விரும்பியிடமிருந்து துவிச்சக்கர வண்டி ஒன்றினை பெற்றுக்கொடுப்பதற்கு முனைவதாக பெண்கள் வலுவூட்டல் நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்திருந்ததுடன் ஏற்கனவே தமது நிலையத்தினால் வழங்கப்பட்ட சைக்கிளினை சேவைநாடி விற்பனை செய்துள்ளதனால் சேவைப்பயனாளி வலுவூட்டலுக்கு உள்ளானதை உறுதி செய்த பின்னரே வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

**மதிப்பீடும் கண்காணிப்பும்**

சேவைப்பயனாளியை வலுவூட்டுவதற்கான பொறுப்புக்களின் செயற்பாட்டினை கண்காணிப்பதற்கு விடய முகாமையாளரான அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பாரப்படுத்தப்பட்டதுடன் விடயமாநாட்டை தொடர்ச்சியாக நடாத்தி செல்லவும் வலியுறுத்தப்பட்டது. பிள்ளைகளிற்கான உளவளத்துணை செயற்பாட்டை உளவளத்துணை ஆசிரியர் மேற்கொண்டிருந்ததுடன் குறித்த பிள்ளைகளின் நடத்தைகளில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் இவ்வருடம் குறித்த ஆசிரியர் இடமாற்றம் பெற்று செல்வதனால் தற்போது சித்திர ஆசிரியர் ஒருவரிடம் குறித்த வேலைத்திட்டத்தை ஒப்படைத்ததாகவும் தெரிவித்தார். குறித்த சேவைநாடியின் வீட்டை சுற்ற வேலி அடைப்பதற்கு காட்டுக்குள் 16 கட்டைகள் வெட்டி போடப்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவில் வேலி அடைத்து விடுவதாகவும் தெரிவித்திருந்தனர். சமுர்த்தி உத்தியோகத்தரினால் புதிதாக சமுர்த்தி திட்டத்தில் பயனாளிகள் உள்வாங்கப்பட்டு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

**சேவைப்பயனாளியின் தற்போதைய நிலை**

சேவைப்பயனாளி தற்போது உளரீதியாக ஆரோக்கியநிலையை அடைந்துள்ளதுடன் சமுர்த்தி உத்தியோகத்தரினால் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதுடன் சேவைப்பயனாளியின் மூத்த மகன் இரணைமடு நீர் தேக்கத்தில் நன்னீர் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வருகிறார் எனினும் அரசினால் வழங்கப்பட்டுள்ள வாழ்வாதார செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. கசிப்பு விற்பனை சமுர்த்தி உத்தியோகத்தரின் தலையீட்டினால் இராணுவ உதவியுடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. சேவைப்பயனாளி தற்போது தங்கு வேலையை தவிர்த்து இரவு நேரங்களில் பிள்ளைகளுடன் நேரத்தை செலவு செய்து வருகிறார்.

**கலந்துரையாடலும் பரிந்துரையும்**

போரினால் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்கள் எதிர் நோக்கும் சவால்கள் விசேடமானவை மட்டுமல்ல வித்தியாசமானவை அவற்றை தேசிய அளவில் பொதுமைப்படுத்துவது என்பது பொருத்தமற்றது. ஆகவே அவ்வாறான சேவைப்பயனாளிகளை கையாளும் போது பொதுவான கொள்கைகள் மற்றும் வரையறைகளின் பால் கையாளப்படுவது என்பதும் வழமையான அரச நிர்வாக பொறிமுறை திறன்களுடன் கையாளப்படுதல் என்பதும் மாற்றி அமைக்கப்பட்டு தனிப்பட்ட ஒவ்வொரு சேவைப்பயனாளிகளின் முழுமையான மதிப்பீட்டின் பிரகாரம் கையாளப்பட வேண்டும். அவ்வாறு நடைபெற்றாலே நீடித்த நிலையான வளர்ச்சியை பெண்தலைமைத்துவ குடும்பங்கள் எட்ட முடியும்.

**எதிர் நோக்கிய சவால்கள்.**

சேவைப்பயனாளியை முழுமையான சமூகப்பணி ரீதியாக அணுகும் முறைமை தெரிந்திருந்த போதும் ஏற்கனவே காணப்பட்ட சேவைவழங்கல் முறைமை காரணமாக சேவைப்பயனாளி கொண்டுள்ள மனப்பாங்கினை மாற்றியமைப்பதில் சவால்கள் காணப்பட்டது.

கிராமமட்டங்களில் சேவைப்பயனாளிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் அரச மட்டங்களில் காணப்படும் கொள்கை உருவாக்கங்களிற்கும் இடையே காணப்பட்ட இடைவெளி குறித்த சேவைப்பயனாளிக்கான சமூகப்பணி இடையீட்டை வரையறைக்குட்பட்டதாக மட்டுப்படுத்தியது.

பிரதேச செயலகத்தினால் சமூகப்பணி பயிலுனராக பணியாற்றுவதற்கான இடைவெளி மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டதுடன் பிரதேச செயலகத்தில் காணப்பட்ட அபிவிருத்திசார் கலந்துரையாடலின் தீர்மான அறிக்கைகள் மட்டுப்பாடுடையதாக இருந்தது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் அசமந்த போக்கு சேவைநாடியுடனான சமூகப்பணி செயற்பாட்டை முன்னிறுத்துவதில் தடையாக இருந்தது. குறிப்பாக சேவைநாடியை கணிப்பீடு செய்வதற்கான வசதி சமூகப்பணி பயிலுனருக்கு மறுக்கப்பட்டிருந்ததுடன் குறித்த கணிப்பீட்டை பிரதேச செயலக உத்தியோகத்தர்களே மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது இதன் விளைவாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் அறிக்கைகளை பெற்றுக்கொள்ள இரண்டு மாதங்கள் சென்றன.

விடயமாநாட்டை மேற்கொள்ள பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான நிலையம் ஆர்வம் காட்டியிருக்காத நிலையில் சிறுவர் நன்னடத்தை பிரிவினை அணுகி விடயமாநாட்டை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் குறித்த விடயமாநாட்டை மேற்கொள்ள முன்னர் சிறுவர் நன்னடத்தை பிரிவின் கணிப்பீட்டு அறிக்கையை கோரியிருந்த போதும் அவ்அறிக்கை கிடைக்கப்பெறாததனால் விடயமாநாட்டில் குறித்த சேவை நாடி தொடர்பான விடயக்கற்கையை முழுவதுமாக பகிரவேண்டி ஏற்பட்டதுடன் விடயமாநாடு ஒழுங்குபடுத்தப்பட்ட சூழல் இரகசியம் பேணும் தன்மையை கொண்டிருக்கவில்லை என்பதில் இருந்து அதிக சிரத்தையை சிறுவர் நன்னடத்தை பிரிவு கொண்டிருக்கவில்லை. சேவை நாடியின் ஒத்துழைப்பு மற்றும் பாலியல் தொடர்பு மற்றும் பிடிவாதம் காரணமாக சேவைப்பயனாளியை வலுவூட்டுவது சிரமம் நிறைந்ததாக காணப்பட்டது.

**எதிர் கொண்ட வழிமுறை**

பிரதேச செயலக உத்தியோகத்தர்களை பயன்படுத்தியே தொழில்வாண்மை கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் தினமும் அவர்களுடன் கதைத்து நினைவு படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

களப்பயிற்சி நிறுவனம் விடயமாநாட்டை வைக்க விரும்பியிராத காரணத்தினால் சிறுவர் நன்னடத்தை திணைக்களத்துடன் இணைந்தே குறித்த விடயமாநாட்டை மேற்கொள்ளப்பட்டது.

விடயமாநாட்டின் போது சேவைப்பயனாளிக்கு முன்னறிவித்தல் வழங்கியிருந்த போதும் சேவைப்பயனாளி சமூகம் தராததனால் சேவைப்பயனாளி இன்றியே விடயமாநாடு மேற்கொள்ளப்பட்டது.

**உணர்வும் பிரதிபலிப்பும்**

சேவைப்பயனாளிக்கு சமூகப்பணியாளராக இயன்றவரை அணுகிய போதும் உளரீதியான ஆறுதல் இருப்பதாக சேவைப்பயனாளி வெளிப்படையாக தெரிவித்திருந்த போதும் சமூகப்பணி இடையீட்டின் நோக்கம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது சமூகப்பணி இடையீட்டில் காணப்பட்ட தவறுகளை அடையாளம் கண்டு மீண்டும் ஒரு விடயப்பணி செயன்முறையை சிறப்பாக செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை காணப்பட்டது.

அரச உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றுவதும் சேவைப்பயனாளியின் உயரிய நலன்களை விட கொள்கை உருவாக்கங்களுக்கு முக்கியம் அளிப்பதும் சேவைவழங்குனர்கள் மாற்றத்தை எதிர்கொள்ள வேண்டும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்தியது.

**முடிவுரை**

தொழில்வாண்மையான சமூகப்பணியானது வகுப்பறைகளில் உரிய விஞ்ஞானமற்றும் கலைசார்ந்ததாக கற்பிக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பாரிய இடைவெளி இருப்பதை காணமுடிந்தது. சேவைப்பயனாளியின் வெளிப்படை பிரச்சினை பொருளாதார பிரச்சினையாக தோற்றம் பெற்றலாலும் அதின் உண்மையான வடிவத்தில் உளரீதியான மற்றும் சமூக ரீதியான காரணிகள் செல்வாக்கு செலுத்தியிருந்ததுடன் அவற்றை களைவதில் வெளிக்காரணிகளின் செல்வாக்கை கட்டுப்படுத்தி சேவைப்பயனாளியின் சிந்தனை மற்றும் அறிகை நடத்தை ஆகியவற்றில் மாற்றம் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சூழலியல் கோட்பாடு உளப்பகுப்பாய்வு கோட்பாடு விருத்தி உளவியல் கோட்பாடு ஜநாவின் பெண்தலைமைத்துவ குடும்பங்களிற்கான கொள்கைகள் மற்றும் மாவட்ட மற்றும் தேசிய அடிப்படையிலான கொள்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு முழுமையான கணிப்பீட்டின் பின்னர் சமூகப்பணி திறன்கள் மற்றும் சமூகப்பணி மூலதர்மங்களை பின்பற்றி வேறுபட்ட சமூகப்பணியாளரின் வகிபங்கை பயன்படுத்தியும் அரச நிர்வாக பொறிமுறைகளை மீறாமலும் குறித்த சேவைப்பயனாளியின் இயலுமையை கட்டியெழுப்பி பொருளாதார வலுவூட்டலை மேற்கொள்ள கவனம் செலுத்தப்பட்டது.

**உசாத்துணை நூல்**

அஸ்மியாஸ் (2018), மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்வு ஒரு உளவியல் கண்ணோட்டம், ரேடியன்ஸ் பதிப்பகம், கொழும்பு.

இராசேந்திரம் ஸ்ராலின்,(2015),ஆளுமை கொள்கைகள், ஜீவநதி வெளியீடு, அல்வாய்.

வேலுப்பிள்ளை சிவயோகலிங்கம் (2014) இலங்கையில் சிறுவர் பராமரிப்பும் அபிவிருத்தியும் இஸ்லாமிக் புக் கவுஸ் கொழும்பு.

ஆல்போன்ஸ் (2014) முழு மனித வளர்ச்சியில் உன் ஆளுமை கிளறேசியன் பப்ளிக்கேசன், வெலிசர

ஜெயராசா (2008), சீர்மிய உளவியல், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

ஜெயராசா (2008), உளவியல் முகங்கள், சேமமடு பதிப்பகம், கொழும்பு

தணலன்(2005), சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ், பிரேமா பிரசுரம், சென்னை

சிறி ஹெட்டிகே (2017), நிதானமான சமூகத்தை நோக்கி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கஜவிந்தன் (2017), உளவியல், குமரன் புத்தக இல்லம், சென்னை.

முத்துலிங்கம் (2010), கல்வியும் உளவியலும், சேமமடு பதிப்பகம், கொழும்பு